| | வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | **இராமநாதபுரம்** | காலம்: | **03/07/2024** | முதல் | **07/07/2024** | |
| அறிக்கை எண் : | **053/ 2024** | வெளியீட்டு நாள்: | | **02/07/2024** | | |

### இராமநாதபுரம் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 34°-35° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25°-26° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (27.06.2024 **முதல்** 01.07.2024) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 07-07-2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 27/06 | 28/06 | 29/06 | 30/06 | 01/07 | **தேதி** | **நாள்-1** 03/07 | **நாள்-2** 04/07 | **நாள்-3** 05/07 | **நாள்-4** 06/07 | **நாள்-5** 07/07 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.4 | மழை (மி.மீ) | 2 | 6 | 0 | 2 | 0 |
| 37 | 35 | 34 | 34 | 34 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 35 | 35 | 34 | 35 | 34 |
| 25 | 25 | 25 | 26 | 26 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 25 | 24 | 24 | 25 | 24 |
| 8 | 3 | 2 | 5 | 5 | மேக மூட்டம் (ஆக்டா) | 6 | 7 | 5 | 7 | 8 |
| 74 | 74 | 82 | 78 | 75 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 60 | 60 | 60 | 60 | 60 |
| 75 | 77 | 76 | 80 | 78 | | 40 | 50 | 40 | 40 | 50 |
| 2 | 8 | 11 | 9 | 4 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 14 | 20 | 22 | 22 | 22 |
| தெற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | தெற்கு | தென் மேற்கு | காற்றின் திசை | **தெற்கு** | **தென் மேற்கு** | **தெற்கு** | **தென் மேற்கு** | **தென் மேற்கு** |

**குறுஞ்செய்தி :**

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஜூலை 3, 4 மற்றும் 6 தேதி லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 34°-35° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 24°-25° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 14 முதல் 22 கி.மீ வேகத்தில், தெற்கு மற்றும் தென்மேற்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

**பொது ஆலோசனை:**

**அடுத்த வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலைமுன்னறிவிப்பு(05-11 ஜூலை 2024):**

**மழைப்பொழிவு :**

05-07-2024 - 11-07-2024: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் இயல்பானது முதல் இயல்பை விட சற்று கூடுதலான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

**அதிகபட்ச வெப்பநிலை :**

05-07-2024 - 11-7-2024: மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது பொருத்தமட்டில் பொதுவாக இயல்பை ஒட்டியே காணப்படும். 36° செல்சியஸ் முதல் 36° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு

**குறைந்தபட்ச வெப்பநிலை :**

05-07-2024 - 11-07-2024: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் இயல்பை ஒட்டியே காணப்படும். 24° செல்சியஸ் முதல் 28° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : நெல், பருத்தி, கால்நடை.**

**நெல்:**

மானாவாரியில் நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் தரமான விதைகளை விதைப்பதற்கு ஒரு நாள் முன்பாக ஒரு சதவிகித பொட்டாசியம் குளோரைடு கரைசலில் 6 மணி நேரம் ஊற வைத்து பின் நிழலில் 16 மணி நேரம் உலரவிட்டு விதைப்பை மேற்கொள்ளும் பொழுது விதை கடினத் தன்மையுடன் போதுமான ஈரம் மண்ணில் கிடைத்த பின்பு முளைத்து வளரும் தன்மையை பெறும்.

இவ்விதை கடினப்படுத்துதல் நேர்த்தி மூலம் சீரான முளைப்புத் திறனையும், வளர்ச்சியையும் இளம் நாற்றுக்கள் பெறுவதோடு வீரிய நாற்றுகளாக உருவெடுக்கும்.

**பருத்தி:**

களிமண் பாங்கான நிலங்களில் பயிரிடப்பட்டுள்ள பருத்திப் பயிரில் வாடல் நோயின் தாக்குதல் அதிகம் காணப்படும். இந்த நோய் இளம் மற்றும் வளர்ச்சிப் பருவத்தில் பயிரினை தாக்கும்.

வளர்ந்த செடியின் அடிப்பகுதியில் உள்ள இலைகள் முதலில் வாட ஆரம்பிக்கும். இவ்வாறு பாதிக்கப்பட்ட தண்டினை பிளந்து பார்த்தால் கருமை நிற கோடுகளைக் காணலாம்.

பாதிக்கப்பட்ட செடிகளைச் சுற்றி 10 லிட்டர் தண்ணீருக்கு 10மில்லி என்ற அளவில் அசாக்சிஸ்ட்ராபின் மருந்துடன் 35கிராம் காப்பர்-ஆக்சி-குளோரைடு கலந்து ஊற்ற வேண்டும்.

**கால்நடை:**

ஆடு வளர்க்கும் விவசாயிகளின் கவனத்திற்கு. ஆடுகளின் எடை அதிகரிக்கவும், ஆட்டுகுட்டிகளின் இறப்பை தவிர்க்கவும் குடற்புழு நீக்கம் செய்வது மிகவும் அவசியமாகும்,

பொதுவாக ஜீலை முதல் செப்டம்பர் மாதங்களில் தட்டைப் புழுக்களுக்கான குடற்புழு நீக்க மருந்துகளை கொடுக்க வேண்டும்,

அருகிலுள்ள கால்நடை மருத்துவரை அணுகி தங்களது ஆடுகளுக்கு குடற்புழு நீக்க மருந்தினை கொடுக்கவும்.